# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**முறையீட்டு மனு எண்: 1340/2016/பே**
**ஆணை எண்.13 /2018/நாள். 23–01–2018**

**திரு. சே. நாகராஜன்,**
**76–பி, ராமசாமி சந்து,**
**திசையன்விளை,**
**திருநெல்வேலி மாவட்டம்.** — முறையீட்டு மனுதாரர்

**செயல் அலுவலர்,**
**களக்காடு பேரூராட்சி,**
**திருநெல்வேலி மாவட்டம்.** — எதிர் மனுதாரர்

**ஆணை**

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையை சேர்ந்த திரு கே. நாகராஜன் என்பவரின் 22.12.2016 ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.12.2016 அன்று பெறப்பட்டது. மேற்படி மனு எண் 1340/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், நேரடி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் முறையாக பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் திருநெல்வேலி மாவட்டம், களக்காடு தேர்வு நிலை பேரூராட்சியில், பேரூராட்சி மன்றக் கூட்டம் 07.09.2016ல் நடைபெற்றதாகவும் மேற்படி கூட்டத்தில் பொருள் எண் 5, 6, 7, 8, 9 மற்றும் 10ல் மேற்படி பேரூராட்சியில் உயர்மின் கோபுர விளக்கு அமைக்க தீர்மானம் இயற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்மானத்தின் அடிப்படையில் மொத்தம் சுமார் 34 உயர் மின்கோபுர விளக்குகள் அமைக்க ஒவ்வொன்றுக்கும் தலா ரூ 3.00 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுள்ளதாக தனது மனுவில் தெரிவித்துள்ளார். மேற்படி பணிகளுக்கு முறையாக மதிப்பீடுகள் தயாரிக்காமலும், டெண்டர் பெறப்படாமலும், முறைகேடாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ரூபாய் ஒரு கோடிக்கான பணிகள்

நடைபெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார். இதனால் இப்பணிகளுக்கு வருமானவரி பிடித்தம், வாட்வரி, தொழிலாளர் நல நிதி மற்றும் டெண்டர் டிபாசிட் ஆகியவை பிடித்தம் செய்யாமல் முழுத் தொகையினையும் ஒப்பந்தக்காரருக்கு கொடுத்துவிட்டனர் எனவும் இது சம்பந்தமாக செயல் அலுவலர் திரு சாமுவேல் துரைராஜ் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.மு.ஷாஹின் அபுபக்கர் ஆகியோர் மீது புகார்கள் தெரிவித்து தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ 29.12.2016 ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் களக்காடு பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இதன்படி களக்காடு பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித எண் 6/2017 நாள். 30.01.2017ன் மூலம் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

களக்காடு தேர்வு நிலை பேரூராட்சியில் வார்டு எண் 5, 8, 9, 15, 19 மற்றும் 5வது வார்டில் கூடுதலாக ஒரு உயர்மின் கோபுர விளக்கும் மொத்தம் 6 விளக்குகள் தலா ரூ 2.99 லட்சம் மதிப்பீட்டில் அமைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இதன்படி களக்காடு பேரூராட்சியின் கடித ந.க.எண்.12/2016/நாள் 10.06.2016ன்படி ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதாகவும், குறைவான ஒப்பந்தபுள்ளியினை களக்காடு பேரூராட்சி மன்ற தீர்மான எண் 722, 723, 724, 725, 726 நாள் 07.09.2016 ன்படி அங்கீகாரம் அளித்துள்ளதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து களக்காடு பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண் 12/2016/நாள் 15.06.2016 மற்றும் 16.06.2016 ஆகிய தேதிகளில் பணி உத்திரவு வழங்கப்பட்டதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். பேரூராட்சி மன்றத்தால் ரூ.8.00 லட்சம் மதிப்பீட்டு வரையிலான பணிக்கு நிர்வாக அனுமதி வழங்க, அரசாணை எண் 166/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.3) துறை நாள் 12.04.2008ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் இப்பணிகளுக்கு திருநெல்வேலி மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நிர்வாக அனுமதி பெறப்படவில்லை என தெரிவித்துள்ளார். ஆனால் பணி முடிக்கப்பட்டு பட்டியல் தொகை வழங்கப்படும் முன்னர் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அனுமதி பெற்றுத்தான் தொகை வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். மேலும் பணியில் கட்டிட பணிகள் ஏதும் இல்லாததால் அதற்கான மதிப்பீடு பெறப்படவில்லை. பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு டேவணித் தொகை பிடித்தம் செய்யப்படும் எனவும், மேற்படி பணிகளுக்கான பட்டியல் தொகை எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை எனவும், பட்டியல் தொகை பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அனுமதி பெற்று வழங்கப்படும்போது வருமானவரி, விற்பனை வரி, தொழிலாளர் நல நிதி மற்றும் அரசு விதிமுறைகளின்படி அனைத்து பிடித்தங்களும் மேற்கொள்ளப்படும் எனவும் தனது அறிக்கையில் களக்காடு பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளபடி விதி மீறல்கள் ஏதும் இல்லை எனவும் 36 இடங்களில் உயர்மின் கோபுர மின் விளக்குகள் அமைக்கப்படவில்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து இப்பொருள் தொடர்பாக முறையீட்டு மனுதாரரின் நேரடி விளக்கத்தினை பெற இம்முறைமன்ற நடுவத்தில் 12.10.2017 அன்று ஆஜராக கோரி இம்முறைமன்ற நடுவ 24.08.2017 ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

திரு கே. நாகராஜன், முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் 12.10.2017 அன்று ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........... தான் திசையன்விளையில் குடியிருந்து வருவதாகவும், திசையன்விளை பேரூராட்சி குறித்து இதுவரை தான் புகார் மனு ஏதும் அனுப்பவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தனது மனைவி திருமதி. விஜயகுமாரி அவர்கள் ஒப்பந்தக்காரராக உள்ளதாகவும், அவரது கணவராகிய தான் அவர் பெயரில் திசையன்விளை பேரூராட்சியில் வேலைகள் எடுத்து செய்து வருவதாக தெரிவித்துள்ளார். களக்காடு பேரூராட்சியில் வேலைகள் செய்வதற்கு முயற்சி செய்ததாகவும் ஆனால் டெண்டர் முறையாக விடவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இதனால் தான் மனு அனுப்பியதாகவும் தெரிவித்துள்ளார். ஏர்வாடி பேரூராட்சி பற்றி தனக்கு எந்த ஒரு புகாரும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். தனது 22.12.2016 ம் நாளிட்ட மனுவில் ஆறு வேலைகள் குறித்து புகார் செய்துள்ளதாகவும், தற்போது 30 வேலைகளில் முறைகேடு நடந்துள்ளது எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். ஏற்கனவே மனுவில் குறிப்பிட்டுள்ள 6 வேலைகளும் தற்போது 30 வேலைகளும் சேர்த்து 36 வேலைகள் எந்தவிதமான அங்கீகாரமோ மேல் அலுவலர் ஒப்புதலோ இல்லாமலும் வேலைகள் நடந்து சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இதில் பிடித்தம் செய்யப்படவேண்டிய சட்டபூர்வமான தொகைகள் பிடிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இதன் மூலம் ஒப்பந்தக்காரருக்கு சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். ஒப்பந்தக்காரர் பெயர் கங்கா எலக்ட்ரிகல்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனம் எனவும் அப்போது திரு சாமுவேல் துரைராஜ் என்பவர் செயல் அலுவலரக இருந்தார் எனவும் அவர் தற்போது ஓய்வு பெற்று திருநெல்வேலியில் வசித்து வருகிறார் எனவும் தெரிவித்துள்ளார். அவருக்கு முழு ஒத்துழைப்பு அளித்தவர் பேரூராட்சியின் உதவி இயக்குநர் திரு. மாஹின் அபுபக்கர் என்பவர் எனவும் தெரிவித்துள்ளார். முறைப்படி டெண்டர் விட்டு இருந்தால் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்திருப்பார்கள் எனவும், சுமார் ரூ 20.00 லட்சம் ரூபாய் களக்காடு பேரூராட்சிக்கு லாபமாக இருந்து இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார். மேலும் அரசுக்கு சேரவேண்டிய விற்பனை வரி 1%, வருமான வரி 2% டெபாசிட் தொகை 5 சதவீதம் இவை அனைத்தும் பிடித்தம் செய்யப்படாமல் இழப்பீடு செய்யப்பட்டுள்ளது என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் 12.10.2017 அன்று அளித்த வாக்கு மூல நகலினை களக்காடு பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பி இதன் மீதான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ 07.11.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

இப்பொருள் தொடர்பாக தனது வாக்குமூலத்தினை பதிவு செய்யக் கோரி களக்காடு பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு சாமுவேல் துரைராஜ் மற்றும் தற்போதைய செயல் அலுவலர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 09.01.2018 அன்று ஆஜராக, இம்முறைமன்ற நடுவ 08.11.2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

களக்காடு பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 88/2017/ நாள் 22.11.2017ன் மூலம் முறையீட்டு மனுதாரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள பதிவுகளுக்கான விளக்க அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

அரசாணை எண் 166/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.3) துறை நாள் 12.04.2008ன்படி தேர்வு நிலை பேரூராட்சியினை பொறுத்தவரை ஒரு பணிக்கு ரூ 8.00 லட்சம் வரை பேரூராட்சி மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம் என்ற அடிப்படையில் களக்காடு பேரூராட்சியில் வார்டு எண்.5, 8, 9, 5, 15, மற்றும் 19 ஆகியவைகளில் தலா ஒரு உயர் மின் கோபுர விளக்கு ரூ 2.99 லட்சம் மதிப்பீட்டில் அமைக்க 07.09.2016ம் நாளன்று பேரூராட்சியால் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

மேற்படி 6 பணிகளுக்கான ஒப்பந்தபுள்ளிகள் பேரூராட்சி ந.க.எண். 12/2016/நாள் 10.06.2016ன்படி கோரப்பட்டு, விலைப்புள்ளிகள் பெறப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். களக்காடு பேரூராட்சி மன்ற தீர்மான நாள் 07.09.2016ன்படி குறைவான ஒப்பந்தப்புள்ளிக்கு அனுமதி வழங்கப்பட்டதாவும் தெரிவித்துள்ளார். இதன்படி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்தப்புள்ளிக்கு பேரூராட்சி வேலை உத்திரவு ந.க.எண். 12/2016/ நாள் 15.06.2016 மற்றும் 16.06.2016 ஆகிய தேதிகளில் பணி உத்திரவு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இதுவரை 3 பணிகள் முடிக்கப்பட்டு தமிழ்நாடு மின்சார வாரியம், களக்காடு மூலம் மின் இணைப்பு வழங்கப்பட்டு பொதுமக்களின் பயன்பட்டிற்கு கொண்டு வரப்பட்டதாகவும், மீதமுள்ள3 பணிகள் இன்னும் முடிக்கப்படவில்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

புகார் மனுவில் தெரிவித்துள்ளவாறு மேற்படி அரசாணையின்படி பேரூராட்சி மூலம் ரூ.8.00 லட்சம் மதிப்பீட்டிற்கான பணிகளுக்கு பேரூராட்சி மன்றம் மூலமே நிர்வாக அனுமதி வழங்க வழிவகை செய்துள்ளதால் இதன்படி மேற்கண்ட அனைத்து பணிகளுக்கும் ஒவ்வொரு பணியாக பேரூராட்சி மன்றம் மூலம் நிர்வக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே இப்பணிகளுக்காக திருநெல்வேலி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் அனுமதி வாங்கவேண்டிய வழிமுறைகள் இல்லை எனவும் தனது அறிக்கையில் களக்காடு பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி பணிகளில் கட்டிட வேலைகள் ஏதும் இல்லாததால் மதிப்பீடு பெறப்படவில்லை எனவும், மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் விலைப்புள்ளிகளுக்கு மன்றத்தால் அனுமதிக்கப்பட்டதின்பேரில் அதற்கான டெபாசிட் தொகை வசூல் செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

மேற்படி பணிகளுக்கு நாளது தேதி வரை பட்டியல் தொகை ஏதும் வழங்கப்படவில்லை எனவும், மேற்படி பணிகள் முடிக்கப்பட்டு பட்டியல் தொகை பேரூராட்சிகளின் உதவி

இயக்குநரின் அனுமதி பெற்று வழங்கப்படும் போது வருமான வரி, விற்பனை வரி, தொழிலாளர் நலநிதி பிடித்தம் செய்து அரசு விதிமுறைகளின்படி உரிய தலைப்பில் செலுத்தப்படும் எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சியின் செயல் அலுவலர், களக்காடு தெரிவித்துள்ளார்.

மேலும் மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளவாறு இப்பணியில் விதி மீறல்கள் ஏதும் இல்லை எனவும். 36 உயர்மின் கோபுர விளக்குகள் அமைக்கப்படவில்லை எனவும் இதனால் அரசுக்கு நிதி இழப்பு ஏதும் ஏற்படவில்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து களக்காடு பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் திரு.சாமுவேல் துரைராஜ் என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் 09.01.2018 அன்று நேரில் ஆஜராகி தனது வாக்குமூலததினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"…….தான் களக்காடு தேர்வு நிலை பேரூராட்சியில் 27.11.2015 முதல் 31.05.2017 முடிய செயல் அலுவலராக பணிபுரிந்ததாக தெரிவித்துள்ளார். மனுதாரர் திரு கே. நாகராஜன், தான் திசையான்விளை பேரூராட்சியில் கூடுதல் பொறுப்பில் இருக்கும்போது அங்கு ஒப்பந்தக்காரராக இருந்ததாக தெரிவித்துள்ளார். மனுதாரருடைய மனைவியின் பெயரில் ஒப்பந்த பணி எடுத்து வேலை செய்வார் எனவும் தெரிவித்துள்ளார். மனுதாரர் திசையன்விளை பேரூராட்சியில், பேரூராட்சி செயல் அலுவலர்கள் மீது தொடர்ந்து புகார் எழுதுவதும் அவரது கட்டுப்பாட்டில் இருப்பதற்கு இது போன்று செயல்களை தொடர்ந்து செய்ததால் அங்கு எந்த செயல் அலுவலர்களும் நிரந்தாமாக பணியில் இருப்பது இல்லை. 5 ஆண்டுகளில் தான் 21வது செயல் அலுவலராக கூடுதல் பொறுப்பில் இருந்ததாக தெரிவித்துள்ளார். மனுதாரரின் மனு முழுவதுமாக படித்து பார்த்ததாகவும் தெரிவித்துள்ளார். அப்போதிருந்த பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடைய பதவிக் காலம் 25.10.2016 முடியும் நிலையில் இருந்ததால் எல்லா பணிகளும் அதற்கு முன்பே செய்வதற்காக அவசரப்படுத்தினர் என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும் ரூ. 8.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான ஒரு பணியினை செய்ய மன்ற அங்கீகாரம் செய்வதற்கு விதிகள் உள்ளதால் அதன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு முறையாக டெண்டர் விடப்பட்டு குறைந்த விலைப்புள்ளி கோரியவருக்கு டெண்டர் வழங்கப்பட்டது. ஆனால் டெண்டர் எடுத்தவர் பணிகளை தாமதப்படுத்தியதால் எந்த பணமும் பட்டுவாடா செய்யப்படவில்லை. பணம் பட்டுவாடா செய்யப்படும்போது பிடித்தம் செய்யப்படவேண்டிய வரியினைங்கள் மற்றும் கூடுதல் டெபாசிட் தொகை பில்லில் பிடித்தம் செய்யப்படும். ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் கோபுரம் விளக்குகள் அமைக்கப்பட்டது என சொல்வது உண்மைக்கு மாறானது எனவும் தனது வாக்குமூலத்தில் முன்னாள் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். தானும், உதவி இயக்குநர், இருவரும் சேர்ந்து பணம் கையாடல் செய்தோம் அல்லது ஆதாயம் அடைந்தோம் என்று சொல்வது உண்மையல்ல எனவும். தனது பணிக்காலத்தில் 6 விளக்குகள் மட்டுமே அமைக்கப்பட்டு ஒப்பந்தம் கோரப்பட்டு இறுதி செய்யப்பட்டது. 30 விளக்குகள் என சொல்வது சரியல்ல எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

களக்காடு பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர் திருமதி செ. **கலாவதி** இம்முறைமன்ற நடுவத்தில் 09.01.2018 அன்று நேரில் கீழ்கண்டவாறு **தனது** வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

"........தான் 03.07.2017 முதல் களக்காடு தேர்வு நிலை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும், திரு நாகராஜன் என்பவருடைய மனு விவரம் தனக்கு தெரியும் எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மொத்தம் 6 விளக்குகளுக்கு மட்டுமே ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு விதிகளின்படி ஏலம் நடத்தப்பட்டு அதில் 3 விளக்குகள் அமைக்கப்பட்டு முடிவடைந்தது எனவும் இதுவரை எந்த பணபட்டுவாடாவும் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். பணம் பட்டுவாடா செய்யும்போது வரித் தொகை பிடித்தம் செய்யப்படும் எனவும் மொத்தம் 6 விளக்குகளுக்கு மட்டுமே ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதாகவும் 30 விளக்குகள் ரூ 1.00 கோடி என்பது உண்மைக்கு புறம்பானது எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் மனுதாரரின் முறையீட்டு மனு, செயல் அலுவலரின் விளக்கம், முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலத்தின் மீதான செயல் அலுவலரின் கூடுதல் விளக்க அறிக்கை மற்றும் களக்காடு பேரூராட்சியின் முன்னாள்/இந்நாள் செயல் அலுவலர்களின் நேரடி வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டம், களக்காடு பேரூராட்சியில் அரசாணை எண் 166/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.3) துறை நாள் 12.04.2008 ன்படி ரூ 8.00 லட்சம் மதிப்பீட்டிலான ஒரு பணிக்கு பேரூராட்சி மன்றமே நிர்வாக அனுமதி வழங்கலாம் என்ற அடிப்படையில் பேரூராட்சி மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின்படி மொத்தம் 6 உயர்மின் கோபுர விளக்குகள் அமைக்க தலா ரூ 2.99 லட்சம் வீதம் பேரூராட்சி மன்றத்தால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையின்படி இப்பணிக்கு பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நிர்வாக அனுமதி பெறப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் பேரூராட்சி மூலம் ஒப்பந்தபுள்ளிகள் 10.06.2016 கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி மன்ற அங்கீகாரம் 07.09.2016ல் பெறப்பட்டு பேரூராட்சியின் செயல் அலுவலரின் மூலம் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 6 உயர்மின் கோபுர விளக்குகளில் 3 பணிகள் மட்டும் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதாகவும், மீதமுள்ள 3 பணிகள் இன்னும் முடிக்கப்படவில்லை எனவும் பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலரும் தனது நேரடி வாக்குமூலத்தில் உறுதி செய்துள்ளார். முடிக்கப்பட்ட 3 பணிகளுக்கான தொகையும் இன்னும் வழங்கப்படவில்லை எனவும், தொகைகள் வழங்கப்படும் முன்னர் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அனுமதி பெற்று தொகை வழங்கப்படும் எனவும் தொகை வழங்கப்படும்போது சட்டபூர்வமான பிடித்தங்கள் செய்யப்படும் எனவும் களக்காடு பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலரும் தெரிவித்துள்ளார். மேலும் முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் 36 பணிகள் எடுக்கப்படவில்லை எனவும் 6 பணிகள் மட்டுமே எடுக்கப்பட்டுள்ளது என்பதற்கான பேரூராட்சியின் மன்றத் தீர்மானம், மற்றும் நிர்வாக அனுமதி வழங்கக்கூடிய அரசாணை

நகலும் இணைத்து சமர்ப்பித்துள்ளார். இதன்படி களக்காடு பேரூராட்சியில் 6 உயர்மின் கோபுர விளக்குகள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது என்பது உறுதியாகிறது. மேலும் பேரூராட்சி செயல் அலுவலர் முடிவுற்ற 3 பணிகளுக்கு தொகை ஏதும் வழங்கப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார். பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அனுமதி பெற்று அப்பட்டியல் தொகையில் சட்டபூர்வமான பிடித்தங்கள் செய்யப்படும் எனவும் தெரிவித்துள்ளார். இம்முறைமன்ற நடுவத்திற்கு இது குறித்த அறிக்கை தெரிவிக்க ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 -ஆம் நாள் கையொப்பமிட்டுட அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

**-//ஒப்பம்//-**

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**-//உத்திரவின்படி - அனுப்பப்படுகிறது//-**

செயலாளர்.

**பெறுநர்**

**1.திரு. கே. நாகராஜன்,**
**76-பி, ராமசாமி சந்து,**
**திசையன்விளை,**
**திருநெல்வேலி மாவட்டம்.**

2. செயல் அலுவலர்,
களக்காடு பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி.